(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO.208/2017 P.W - 9**

Name : மருத்துவர். ராஜாரவிவர்மன்
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 21.11.2022.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திண்டுக்கல் அரசு ஆரம்ப சுகாதாரநிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உதவிமருத்துவராக பணியில் இருந்த போது கடந்த 26.09.2014 ம் தேதியன்று இரவு 9.35 மணிக்கு நாகமலைபுதுக்கோட்டை காவலர் அழகுராஜா p.c. 2108 என்பவர் மூலம் சுமார் 35 வயது மதிக்கத்தக்க நபரை இறந்தநிலையில் கொண்டு வந்தனர். மேற்படி நபரை நான் பரிசோதனை செய்து பார்த்த போது அவர் இறந்த நிலையில் இருந்ததால் விபத்து பதிவேடு பதிவு செய்து பிணவறைக்கு அனுப்பி வைத்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டின் நகல் **அ.சா.ஆ.6** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.

(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)
**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
**SESSIONS CASE NO.208/2017 P.W - 10**

Name : குமார்
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 21.11.2022.

முதல் விசாரணை:-

நான் தற்போது மதுரை லாலாசத்திரம் அச்சம்பத்தில் குடியிருந்து ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறேன். அச்சம்பத்தை சேர்ந்த கல்யாணசுந்தரம் என்பவரை எனக்குத் தெரியாது. அவருக்கு தோட்டம், வயக்காடு இருக்கும் விபரம் எனக்குத் தெரியாது. இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்த போது என்னுடைய குடியிருப்பு விலாசத்தை மட்டும் கேட்டு தெரிந்துகொண்டார்கள். என்னிடம் கையெழுத்து எதுவும் பெறவில்லை. என் முன்பாக சஎதுவும் தயார் செய்யவில்லை. என் முன்பாக சான்றப் பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலிஸ் விசாரணையில் கடந்த 26.09.2014 ம் தேதியன்று 20.45 மணிக்கு நானும், எங்கள் ஊரைச் சேர்நத் முனியாண்டி மகன் மகாலிங்கம் என்பவரும் கல்யாணசுந்தரம் தோட்டத்திற்கு அருகே வந்த போது திருமங்கலம் காவல்ஆய்வாளர் மதுவிலக்கு பிரிவு பொறுப்பு அதிகாரி நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலைய குற்ற எண்.436/2014 ல் இறந்தது சம்பந்தமாக போலிசார்

சம்பவயிடத்தை பார்வையிட்டு என் முன்னிலையிலும், மேற்படி மகாலிங்கம் என்பவர் முன்னிலையிலும் பார்வைமகஜர் மறறும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், இறந்த நபரின் பேண்ட் பையில் இருந்து ஓட்டுநர் உரிமம் எடுத்தார் என்றும், அதில் ஷாகுல்ஹமீது என்ற பெயர் இருந்தது என்றும் கூறிவிட்டு, தற்சமயம் ஆஜர்எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டதன் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப்
பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை
சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/
கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.